# 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு மண் பரிசோதனை தீவிரம்

## ● முதலில் 52 கிமீ தூரத்துக்கு பணிகளைத் தொடங்க முடிவு

■ சென்னை

சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகளை மேற்கொள்ள, மண் பரிசோதனைப் பணிகள் ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர் உட்பட பல்வேறு இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. மாதவரம் - சோழிங்கநல்லூர், மாதவரம் - கோயம்பேடு பேருந்து நிலையம் வழித்தடங்களில் முதலில் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் 52 கிமீ தூரத்துக்கான பணி தொடங்கப்பட உள்ளது.

சென்னையில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிந்து 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து வண்ணாரப்பேட்டை முதல் விம்கோநகர் வரையிலான விரிவாக்க மெட்ரோ ரயில் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

இதற்கிடையே, இரண்டாவது கட்டமாக மாதவரம் - சிறுசேரி, மாதவரம் - சோழிங்கநல்லூர் மற்றும் கோயம்பேடு - வி.இல்லம் ஆகிய 3 வழித்தடங்களில் 118 கிமீ மெட்ரோ ரயில் திட்டத்துக்கான பணிகளை மேற்கொள்ள நிர்வாகம் கவனம் செலுத்தி வருகிறது.

ரூ.85,047 கோடி மதிப்பிலான திட்ட அறிக்கையில் மக்கள் தொகை, வழித்தடங்கள் விவரம், ரயில் நிலையங்கள், எங்கெல்லாம் சுரங்கங்கள், உயர்மட்ட பாதைகள் அமைப்பது என்பது தொடர்பான வரைப்படங்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன. இந்த அறிக்கையை தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

மேலும், 2-ம் கட்ட மெட்ரோ ரயில் தட பகுதிகளில் மண் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆழ்வார்பேட்டை சி.வி.ராமன் சாலை, லஸ் சர்ச் சாலையை ஒட்டியுள்ள கடைகள், மயிலாப்பூர், ராயப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக மண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




▲ மயிலாப்பூர் லஸ் பகுதியில் மெட்ரோ ரயில் பணிகளுக்கான மண் பரிசோதனையில் தொழிலாளர்கள் நேற்று ஈடுபட்டனர். படம்: க.ஸ்ரீபரத்

இதற்கிடையே, 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் மாதவரம் - சோழிங்கநல்லூர் (35.67 கிமீ), மாதவரம் - கோயம்பேடு பேருந்து நிலையம் (16 கிமீ) வழித்தடங்களில் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மொத்தம் 52.1 கிமீ தூரத்துக்கு மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான மதிப்பீடு மட்டும் மொத்தம் ரூ.40,941 கோடியாகும். இதில், ஜெய்கா நிறுவனம் ரூ.20,196 கோடி நிதி உதவி வழங்கவுள்ளது. முதல்கட்டமாக ரூ.4,770 கோடி கடன் உதவி வழங்கும் ஒப்பந்தம் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறும்போது, "சென்னையில் இரண்டாவது கட்டமாக 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை தொடங்குவதற்கான பணிகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன.

நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடியும் நிலையில் இருக்கின்றன. மண் பரிசோதனைக்காக புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக மண் பரிசோதனைப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் 6 அல்லது 8 மாதங்களில் ஒட்டுமொத்த பணிகளும் நிறைவடையும்.

மாதவரம் - சோழிங்கநல்லூர் (35.67 கிமீ), மாதவரம் - கோயம்பேடு பேருந்து நிலையம் (16 கிமீ) வழித்தடங்களில் மொத்தம் 52.1 கிமீ தூரத்துக்கு மெட்ரோ ரயில் பணிகளை முதலில் மேற்கொள்ள உள்ளோம். இந்தப் பணிகளை மேற்கொள்ள விரைவில் டெண்டர் வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிகளை ஜூன் மாதத்துக்குப் பிறகு தொடங்குவோம்" என்றனர்.